Probate OP No. 23/2024 – Date : 16.03.2026

PW1 – சக்திவேல்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் எனது தாயார், 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் எனது சகோதரிகள் என்றால் சரி. எனது தகப்பனார் 29.03.2017ல் இறந்துவிட்டார் என்றால் சரி. எனது தகப்பனார் அவரது இறப்பு சான்றிதழில் சொல்லப்பட்டுள்ள முகவரியில் குடியிருந்தார் என்றால் சரி. என் மீதும் என் தாயார் மீதும் 2,3 எதிர்மனுதாரர்கள் மனுசொத்து குறித்து பாகம் கோரி 03.10.2023 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரி. அந்த அறிவிப்பில் மேற்படி சொத்து என் தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்து என்றும் மேற்படி சொத்து சம்மந்தமாக என் தகப்பனார் எந்த ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டார் எனவே பாகம் வேண்டும் என்று சொல்லி உள்ளார்கள் என்றால் சரி. மேற்படி அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரி. அதன்பிறகு 12வது மாதம் 2023ல் இந்த மனு தாக்கல் செய்தேன் என்றால் சரி.

எனது தகப்பனார் எனக்கு எந்த தேதியில் உயில் எழுதி வைத்தார் என்றால் தேதி நினைவில்லை, 3வது மாதம் 2017ல் எழுதி வைத்தார். ம.சா.ஆ.1 ஆவணத்தில் உயில் சாசனம் என்று குறிப்பிட்டுள்ளதற்கு மேலே உள்ள பழனி என்று செய்யப்பட்டுள்ள கையெழுத்து என்னுடைய தகப்பனாரின் கையெழுத்து என்றால் சரி.

மேற்படி பத்திரத்தின் முதல் பக்கத்தில் கீழே உள்ள பழனி என்ற கையெழுத்தும் என் தகப்பனாரின் கையெழுத்து என்றால் சரி. உயில் சாசனம் 3 பக்கங்கள் கொண்டது, அதில் ஒரு பக்கம் எழுதப்படாமல் உள்ளது என்றால் சரி. உயில் ஆவணத்தில் என்னுடைய அப்பா கதவு எண்.1/83, காளியம்மன் கோவில் அருகில், இனாம் வேடுகாத்தாம்பட்டி, சித்தர் கோவில் மெயின்ரோடு, சேலம் மேற்கு, சேலம் மாவட்டத்தில் குடியிருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த உயிலில் 22.03.2017 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. என்னுடைய தகப்பனார் 29.03.2017ல் இறந்தார் என்றால் சரி. என்னுடைய தகப்பனார் எனக்கு உயில் எழுதி வைத்தது குறித்து எனக்கு 03.10.2023ல் நோட்டீஸ் வந்தபிறகுதான் தெரியும் என்றால் சரி. மனு சொத்திற்கு பட்டா, சிட்டா ஆகிய அனைத்து வருவாய் ஆவணங்களும் எனது தகப்பனார் பெயரில்தான் உள்ளது என்றால் சரி.

உயில் எழுதி வைத்த தேதிக்கு 7 வருடங்களுக்கு முன்பாக என் தகப்பனார் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரி. அவருக்கு கல்லீரல் நோயும் இருந்தது என்றால் சரி. அவர் பக்கவாத நோய் வந்து முதன் முதலில் அவரை கே.என்.ராவ் மருத்துவமனையில் சேர்த்தோம் என்றால் சரி. அவரை கே.என்.ராவ் மருத்துவமனையில் சேர்த்து 7,8 வருடங்கள் இருக்கும் என்றால் சரி. என் தகப்பனார் இறக்கும்வரையில் பக்கவாத நோய் மற்றும் மஞ்சள்காமாலை நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார் என்றால் சரி. அவரை கே.என்.ராவ் மருத்துவமனையில் சேர்த்தபோது அவருக்கு வலது கையும் இடது காலும் செயல்படவில்லை என்றால் சரி.

உயில் ஆவணத்தில் கடைசி பத்தியில் எனது தகப்பனார் இந்த உயில் சாசனத்தை என்னுடைய ஆயுள் காலத்திற்கு நான் திருத்தி எழுதவும்மாற்றி அமைக்கவும் ரத்து செய்து கொள்ளவும் எனக்கு சகலவிதமான உரிமைகளும் உண்டு, இதன்படிக்கு என்னுடைய முழு மன சம்மதத்துடன் பிறர் தூண்டுதல் எதுவுமின்றி என்னுடைய சுய நினைவுடன் நான் எழுதி வைக்கும் உயில் சாசனம் என்று எழுதப்பட்டுள்ளது என்றும், ஆனால் சாட்சிகள் முன்பாக எழுதி வைத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரி. உயில் ஆவணத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்று சொல்லப்படவில்லை என்றால் சரி. உயில் ஆவணத்திற்கான ரூ.100 பத்திரத்தை யார் வாங்கினார்கள் என்றால் டைப் செய்தவர் வாங்கினார். இந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் சொல்லிதான் வாங்கி வந்தார். பத்திரத்தை எங்கே எப்போது யாரிடம் வாங்கினார் என்றால் பத்திரம் விற்பவரிடம் வாங்கினார். 2017ம் வருடம் 3வது மாதம் வாங்கினார். தேதி தெரியாது. அந்த பத்திரத்தை விற்ற விற்பனையாளர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனார் இறப்பதற்கு முன்னர் மஞ்சள் காமாலைக்காக தனது மகளான 2வது எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்று நாட்டு மருந்து எடுத்துக்கொண்டார் என்றால் சரி.

உயில் சாசனத்தில் என் அம்மாவிற்கு ரூ.1,00,000/– கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு ரூ.1,00,000/– கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. அதற்கான அத்தாட்சி வாங்கினேனா என்றால் ரூ.20 பத்திரத்தில் எழுதி வாங்கினேன். பணம் காசோலையாக கொடுத்தேனா என்றால்

ரூ.500 நோட்டுகளாக கொடுத்தேன்.

எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் தேதி நினைவில்லை. எனது தாயார் இந்த வழக்கில் தரப்பினராக சேர்ந்து வழக்கில் ஆஜராகவில்லை என்றால் சரி. பணம் கொடுத்து பத்திரம் எழுதி பெறப்பட்டதாக சொல்லப்படும் ஆவணம் எத்தனை பக்கம் கொண்டது என்றால் 2 பக்கம் கொண்டது.

என்னுடைய அப்பாவின் உயில் பத்திரத்தில் எனக்கு பிறகு எனது அம்மாவிற்கு ரூ.1,00,000/- கொடுக்க வேண்டும் என்று 2017ல் உயிலில் சொல்லி உள்ளார், ஆனால் உடனே பணம் கொடுக்கவில்லை, 2021ல் தான் மேற்படி பணம் கொடுத்தேன் என்றால் சரி. ஏன் உடனடியாக பணம் கொடுக்கவில்லை என்றால் என்னிடம் பணம் இல்லை, எனவே உடனடியாக கொடுக்க முடியவில்லை. எனது சகோதரிகள் எனக்கு நோட்டிஸ் அனுப்பியபிறகுதான் இந்த உயிலை பொய்யாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உயிலில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய அப்பாவின் கையெழுத்துகள் இல்லை என்றும் அவை போலியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2017லிலேயே என் தகப்பனார் எனக்கு உயில் எழுதி வைத்திருந்தால் அப்போதே வருவாய் ஆவணங்களை எனது பெயருக்கு மாற்றியிருப்பேன் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு பணம் கொடுத்ததாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் போலியான ஆவணம் என்றும் எனவேதான் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக இருந்துள்ளார் என்றால் சரியல்ல. உயிலுக்கான

ரூ.100 பத்திரம் குமார் என்பவருக்கு விற்றுள்ளதாக தகவல் அறியும் உரிமை சட்டத்தில் 2,3 எதிர்மனுதாரர்கள் தகவல் பெற்றுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. ம.சா.ஆ.6–சம்மத முச்சலிகா பத்திரமும் ராம் என்பவர் வாங்கி உள்ளதாக தகவல் அறியும் உரிமை சட்டத்தில் 2,3 எதிர்மனுதாரர்கள் தகவல் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பக்கவாதநோயால் பாதிக்கப்பட்டிருந்ததால் அவரால் கையெழுத்து போடமுடியாது என்றால் அவர்தான் கையெழுத்து செய்தார்.

2,3 எதிர்மனுதாரர்கள் ம.சா.ஆ.1 உயில் ஆவணம் மற்றும் ம.சா.ஆ.6 சம்மத ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும் பாகம் கோரியும் 3வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.304/2024 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1உயில் ஆவணம் எழுதப்பட்டதாக கூறப்படும் தேதிக்குபின்னர் 7 நாட்கள் கழித்து என் தகப்பனார் இறந்துள்ளார் என்பதிலிருந்தே மேற்படி உயில் சாசனம் போலியானது என்பது தெளிவாகிறது என்றால் சரியல்ல. உயில் சாசனத்தில் உள்ள சாட்சிகள் அனைவரும் பொய்யான உயிலுக்கு அனுசரணையாக என்னால் தயார் செய்யப்பட்ட சாட்சிகள் என்றால் சரியல்ல. அவர்கள் அனைவரும் எனது தகப்பனாரின் உறவினர்கள். எனது சகோதரிகளுக்கு வழக்கு சொத்து போகக்கூடாது என்பதற்காக இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது சகோதரிகளுக்கு பாகம் கொடுக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா உடல்நிலை சரியில்லாத போது நான் அவரை

கவனித்துக்கொண்டதால் அவர் எனக்கு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார். என் தகப்பனார் உடல்நிலை சரியில்லாதபோது எனது சகோதரிதான் அவரை கூட்டிச்சென்று மருத்துவ செலவு செய்தார் என்றால் சரியல்ல. பண்டிகை என்றால் அழைத்து செல்வார், ஆனால் மருத்துவ செலவுகள் செய்யமாட்டார். எனது சகோதரிகளும் என் தகப்பனாரை பார்த்துக்கொண்டார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.